RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# அற்புதத் திருவந்தாதியில் வாழ்வியல் விழுமியங்கள்

குெ.இர. லெட்சுமி [அ, *]

[அ] தமிழ்த்துறை, சௌராட்டிரா கல்லூரி மதுரை, தமிழ்நாடு, இந்தியா

# Life Values and Saivite Philosophy in Arputha Thiruvandhadhi

**K.R. Lakshmi** [a, *]

[a] Department of Tamil, Saurashtra College, Madurai. Tamil Nadu, India

* Corresponding Author:
drlakshmikr@gmail.com

**ABSTRACT**

Saivism is a religious tradition that recognizes Lord Shiva as the Supreme Being and emphasizes devotion to Shiva as a means of attaining liberation (mukti). Although Saivism enjoyed considerable prominence in ancient Tamil society, its influence declined over time. During the period of the Bhakti movement, the Nayanmars played a significant role in revitalizing Saivism. Among the sixty-three Nayanmars, Karaikkal Ammaiyar is regarded as one of the earliest and most distinctive devotees. Revered by Lord Shiva himself as “Ammaiye,” she occupies a unique position in Tamil Saivite devotional literature. Although Karaikkal Ammaiyar's Arputha Thiruvandhadhi is primarily a work of devotional literature, it contains profound life values that guide human beings toward understanding the purpose of life and living according to higher ethical and spiritual principles. The work reflects important Saivite concepts such as true devotion (mey-anbu), service to God, overcoming the three impurities (mummalam), and complete surrender (saranagathi). Karaikkal Ammaiyar's unwavering devotion to Lord Shiva from her youth, her constant remembrance of the divine, and her recognition of Shiva as the supreme principle responsible for creating, sustaining, transforming, and blessing all living beings reveal a profound understanding of the purpose of human existence. Her determination to surrender to no one other than Shiva and her longing to transcend the cycle of birth further reinforce the spiritual dimensions of her thought. Arputha Thiruvandhadhi therefore functions not merely as a devotional text praising Lord Shiva but also as a profound repository of ethical, spiritual, and existential values. It encourages individuals to cultivate genuine devotion, overcome ego and attachment, free themselves from fear, develop inner clarity, and pursue a peaceful and meaningful life. This article examines the life values expressed in Arputha Thiruvandhadhi, with particular emphasis on devotion, divine service, the removal of the three impurities, surrender, and the realization of the purpose of human life. The study highlights the significance of Karaikkal Ammaiyar's work as both a landmark of Tamil Bhakti literature and a guide to ethical and spiritual living.

**Keywords:** Saivism, Nayanmars, True Devotion, Purpose of the Soul, Three Cosmic Functions, Surrender.

## முன்னுரை

தமிழகத்தின் தொல் சமயமான சைவம் புறக் காரணிகளால் மக்களிடையே சிறப்பிழந்திருந்த காலத்து அதனை மீட்டெடுக்கும் முயற்சியில் ஈடுபட்ட சைவப் பெரியோர்கள் பாடிய பாடல்கள் பன்னிரு திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் பதினோராம் திருமுறையில் வைக்கப்பட்டுள்ள பாடல்கள் பன்னிரு நாயன்மார்களால் பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பாக அமைந்துள்ளது. காரைக்கால் அம்மையார் உள்ளிட்ட பன்னிருவர் பாடி அருளியவை பதினோராம் திருமுறை. இவற்றுள் காரைக்கால் அம்மையார் பாடிய திருவிரட்டை மணிமாலை, அற்புதத் திருவந்தாதி, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் ஆகியவை அடங்கியுள்ளன. இவற்றுள்

காரைக்காலமையாரால் அருளப்பெற்ற அற்புதத் திருவந்தாதியில் இடம்பெற்றுள்ள சைவ சித்தாந்தக் கருத்துக்கள் எவ்வகையில் மக்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளன என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## காரைக்கால் அம்மையார்

காரைக்காலில் பெரு தன வணிகனாரின் மகளாகப் பிறந்து புனிதவதியார் என்னும் இயற்பெயரோடு வளர்ந்தவர். பரமதத்தன் என்னும் வணிகரை மணந்து கொண்டு இல்லறத்தில் இருந்த அம்மையாரை இறைவன் தவக்கோலத்தில் வந்து ஆட்கொள்ள கணவன் கண்டு அஞ்சிய பெண் வடிவத்தை விடுத்து இறைவனிடம் பேய் வடிவம் கேட்டுப் பெற்றார். இதனை,

"ஆன அப்பொழுது மன்றுள் ஆடுவார் அருளினாலே

மேனெறி உணர்வு கூர வேண்டிற்றே பெறுவார் மெய்யில்

ஊன் அடை வனப்பை எல்லாம் உதறி எற்பு உடம்பே ஆக

வானமும் மண்ணும் எல்லாம் வணங்கும் பேய் வடிவம் ஆனார்" 1

என்று பாடி வியக்கிறார் சேக்கிழார் பெருமான்.

## அற்புதத் திருவந்தாதி

காரைக்கால் அம்மையாரால் பாடப் பெற்ற நூல்களில் முதன்மையானது அற்புதத் திருவந்தாதி என கருதப்படுகிறது அற்புதத் திருவந்தாதியை பற்றி குறிப்பிடும் பொழுது 'அற்புதம் என்பது யாவரும் வியந்து போற்றுதற்குரிய உணர்வாகிய மெய்ஞானம் என்ற பொருளைத் தருவதாகும்' என்று கூறுவார் வெள்ளைவாரணர். 2

"உற்பவித்தெழுந்த ஞானத்தொருமையின் உமைகோன் தன்னை

அற்புதத் திருவந்தாதி அப்பொழுது தருளிச்செய்வார்" 3

என்று இறைவன் அருளால் தன் உள்ளத்தில் தோன்றிய சிவஞானப் பொருளை விரித்து அற்புதத் திருவந்தாதியாக அம்மையார் பாடியதைக் கூறுகிறார் சேக்கிழார்.

## சைவ சித்தாந்தம்

உலகில் உயிர்கள் தம் முன் வினைப் பயன்களின் அடிப்படையிலேயே பிறவி எடுக்கின்றன. அவ்வாறு எடுத்த பிறவியின் நோக்கம் என்ன என்பதை அறிந்து அதன் அடிப்படையில் தம் வாழ்க்கையை அமைத்துக் கொண்டு வாழும் போது பிறவித்தளை நீங்கும்; வீடு பேறு கிட்டும் என்பது காலம் காலமாக ஆன்மீக உலகில் இருந்து வரும் நம்பிக்கையாகும். இதனை சைவ சித்தாந்தம் விரித்துரைக்கிறது. உலகத்தினைப் படைத்து காத்து அழிக்கின்ற முத்தொழிலைச் செய்யும் முழுமுதற் கடவுள் சிவன். உயிர்களுடன் கலந்தும் வேறாகவும் இருந்து வினைகளைச் செய்விப்பவன். ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களைக் கடந்தவன் என்பதையும் உயிர் தன்னையும் இறைவனையும் ஒன்றாக உணர்ந்து யான் எனது என்ற செருக்கினை விடுத்து இறை சிந்தனையில் இருத்தல், ஐம்புலன்களை அடக்கி சிவத்தை அடைதல், சிவன் பால் மாறாத அன்பு கொள்ளல் சிவத்தின் மீது பற்று கொண்டு அவன் அருளால் சிவஞானம் அடைதல் ஆகிய கருத்துக்களையே சைவ சித்தாந்த நூல்கள் விதந்தோதுகின்றன.

## உயிர் நோக்கம் அறிதல்

முற்பிறவியில் தான் செய்த வினைகளின் காரணமாகப் பெற்ற இப்பிறவித் துன்பத்திலிருந்து விடுதலை பெற்று இறைவனின் திருவடிகளை அடைவதே உயிர் நோக்கம் என்பதை உணர்த்திப் பாடுகிறார் காரைக்கால் அம்மையார்.

"பிறந்து மொழி பயின்ற பின்னெல்லாங் காதல்

சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன் - நிறந்திகழும்

மைஞ்ஞான்ற கண்டத்து வானூர் பெருமானே

எஞ்ஞான்று தீர்ப்ப திடர்."4

இளம்பருவத்தில் இருந்து உன் மீது பற்று கொண்டு உன் திருவடிகளையே வணங்குகிறேன் இறைவனே நீ என் பிறவித் துன்பத்தை நீக்குவது எப்போது என்று கேட்கிறார் அற்புதத் திருவந்தாதியின் முதல் பாடலே பிறவித் துன்பத்திலிருந்து விடுபட்டு இறைவனின் திருவடிகளை அடைய வேண்டும் என எண்ணும் அம்மையாரின் உள்ளத்தைக் காட்டுகிறது.

## மெய்யன்பு

வாழ்வில் இன்ப துன்பங்களை எதிர்கொள்ளும் போது இறைவனைக் கருத்தில் கொண்டு எவ்வித எதிர்பார்ப்புமின்றி அவனிடம் அன்பு செலுத்துவதே உண்மையான பக்தி என்பதை அம்மையார் வலியுறுத்துகிறார். இறைவன் எனக்கு வரும் துன்பத்தை நீக்கவில்லை என்றாலும் என் மீது பரிவு கொள்ளவில்லை என்றாலும் அவர் மீது நான் கொண்டிருக்கக் கூடிய அன்பு என்னாளும் மாறாது என்பதை,

"இடர்களையா ரேனும் எமக்கிரங்கா ரேனும்
படரு நெறிப் பணியாரேனும் - சுடருருவில்
என்பறாக் கோலத் தெரியாடு மெம்மனார்க்
கன்பறா என்னெஞ் அவர்க்கு."5
எனும் பாடலின் வழி உணர்த்துகிறார்.

## சரணடைதல்

"யானே தவமுடையேன் என் நெஞ்சே நன்நெஞ்சம்
யானே பிறப்பறுப்பான் எண்ணினேன் - யானேயக்
கைம்மா உரிப்போர்த்த கண்ணுதலான் வெண்ணீற்ற
அம்மானு காளா யினேன்."6

மதயானையின் தோலைப் போர்த்தியவனும் நெற்றியில் கண்ணை உடையவனும் வெண்ணீற்றை அணிந்தவனுமாகிய இறைவனே என் பிறவித் தொடர்ச்சியை அறுக்க வல்லவன் என எண்ணி அவனுக்கே அடிமையானேன் என்று இறைவனின் திருவடிகளில் சரணடையும் தன்மையை எடுத்துக் கூறுகிறார் காரைக்கால் அம்மையார். மேலும்

"அவருக்கே எழுபிறப்பும் ஆளாவோம் என்றும்
அவருக்கே நாம் ஆளாகாதல்லால் - பவர்சடை மேல்
பாகாப்போழ் சூடுமவர்க் கல்லான் மற்றொருவர்க்
காகாப்போம் எஞ்ஞான்றும் ஆள்."7

என்று தன் நெஞ்சில் குடி கொண்டிருக்கும் இறைவனுக்கே ஏழு பிறப்பும் அடிமையாவோம் அன்றி வேறொருவர் அடிபணிய மாட்டோம் என்று சிவபெருமானைச் சரணடைகிறார்.

## முத்தொழில்

உலகங்களைப் படைத்தல் காத்தல் அழித்தல் எனும் முத்தொழில்களையும் இறைவன். திருமாலும் நான்முகனும் தேடித் திரியும் பொழுது அவர்களுக்கு அரியவனாகிக் காணக் கிடைக்காத இறைவன் என் போன்ற அடியவர்களுக்கு எளியன் என்று கூறுவதுடன்,

"அரனென்கோ நான்முக னென்கோ வரிய
பரனென்கோ பண்புணர மாட்டேன் - முரணழியத்
தானவனைப் பாதத்தில் விரலாற்ச் செற்றானை
யானவனை யெம்மானை யின்று."8

'உலகங்களைப் படைக்கின்ற தொழிலைச் செய்வதனால் அவனை அயன் என்று அழைத்திடுவேனோ? காத்தல் தொழிலைச் செய்வதனால் அவனை அரியென்று அழைத்திடுவேனோ? அல்லது ஒடுக்குதலாகிய தொழிலைச் செய்வதனால் அவனை அரனென்று அழைத்திடுவேனோ?' என்று

இறைவன் செய்யும் முத்தொழில்களையும் கூறிச் சிவமே அனைத்திற்கும் முதன்மை என்பதை உணர்த்துகிறார்.

## சிவமாம்தன்மை

உலகத்தின் மேல் உள்ள பற்று நீங்கி இறைவன் மீது பற்றுக் கொண்டு அவனையே எண்ணி இருக்கும் பொழுது மெய்யுணர்தலினால் இறைவனை உணர்வது சிவஞானம் பெறுவது; சிவமாம் தன்மை என்று கூறப்படுகிறது.

"ஒன்றே நினைத்திருந்தேன் ஒன்றே துணிந்தொழிந்தேன்

ஒன்றேயென் னுள்ளத்தி னுள்ளடைந்தேன் "9

ஒன்றையே நினைத்திருந்தேன்; வேண்டும் தகுதி உடையது ஒன்றே என்று கருதி பிறவற்றை நீங்கினேன்; ஒன்றையே என் உள்ளத்தில் கருதி இருந்தேன் என்று பிறையணிந்த இறைவனையே தான் எப்பொழுதும் எண்ணியிருந்ததைக் கூறுகிறார் காரைக்கால் அம்மையார்.

"அறிவானுந் தானே அறிவிப்பான் தானே

அறிவா யறிகின்றான் தானே - அறிகின்ற

மெய்ப்பொருளுந் தானே விரிசுடர்பார் ஆகாசம்

அப்பொருளுந் தானே அவன்."10

என்று கண்களுக்குப் புலனாகும் பொருள்களாகவும் புலனாகா ஆன்மாவாகவும் அனைத்துமாகவும் இறைவன் இருக்கின்றான் என்பதைக் கூறி அத்தகைய இறைவனே நாம் அறிய வேண்டியவன் என வலியுறுத்துகிறார்.

## முடிவுரை

"இறவாத இன்ப அன்பு

வேண்டிப்பின் வேண்டு கின்றார்

பிறவாமை வேண்டும் மீண்டும்

பிறப்புண்டேல் உன்னை என்றும்

மறவாமை வேண்டும் இன்னும்

வேண்டும்நான் மகிழ்ந்து பாடி

அறவாநீ ஆடும் போதுன்

அடியின்கீழ் இருக்க என்றார். "11

என்று இளமையிலிருந்தே இறைவன் மீது மாறாத அன்பு கொண்டு எப்பொழுதும் இறை சிந்தனையிலேயே இருந்து கணவன் கண்டு அஞ்சிய பெண் வடிவத்தை வெறுத்துப் பேய் வடிவத்தினை இறைவனிடம் கேட்டுப் பெற்ற காரைக்கால் அம்மையார் உலகங்கள் யாவையும் படைத்தும் காத்தும் இயக்கும் இறைவனைச் சரணடைந்து அவனது திருவடியின் கீழ் இருக்கும் பேற்றினை வேண்டிப் பெற்ற தன்மையினைப் பாடுகிறார் சேக்கிழார் பெருமான்.

பிறப்பறுக்கும் பிஞ்ஞகனைப் பாடி 'யான்' 'எனது' என்ற செருக்கை விட்டொழித்து வாழ்தலே வினைப் பயன்களை அழித்து இறை நிலையை நோக்கி முன்னேற வழி வகுக்கும் என்ற உயரிய சிந்தனையை காரைக்கால் அம்மையாரின் அற்புதத் திருவந்தாதி வழங்குகிறது.

## References

பெரியபுராணம், காரைக்கால் அம்மையார் புராணம்

அற்புதத் திருவந்தாதி, வெள்ளைக்காரனார் உரை

பெரியபுராணம், காரைக்கால் அம்மையார் புராணம்

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License